[2007 ஜனவரி 25

வானூர் தொகுதி, வானூர் ஒன்றியம், நாணக்கால்மேடு கிராமத்தில் கால்நடை மருத்துவம்னை அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, வானூர் ஒன்றியம், நாணக்கால்மேடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்திட அரசு தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

திரு. எல்.பி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சத்தியமங்கலம் தொகுதி, சத்தியமங்கலம் ஒன்றியத்தில் குத்தியலத்தூர், மாக்கம்பாளையம், குன்றி, திங்களூர், கெர்மலம் ஆகிய ஊராட்சிகள் முற்றிலும் மலைப் பகுதியை உள்ளடக்கிய அதிக பரப்பளவு கொண்ட பகுதியாகும். இந்த மலைப் பகுதியில் ஒரு மையப் பகுதியைத் தேர்ந்தெடுத்து ஒரு முழுநேர கால்நடை மருத்துவமனை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, இந்த வேண்டுகோளை ஏற்று கேட்பதையும், கேட்காததையும் கொடுக்கும் நமது கலைஞர் அரசு நிறைவேற்றிக் கொடுக்குமா எனத் தங்கள்மூலமாக அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, அந்தப் பகுதியில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட கால்நடைகள் இருப்பின், அந்த எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய கால்நடை மருந்தகம் அமைக்க, இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 38, திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

2007 ஜனவரி 25]

38—

நிதி உதவி

***699—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிட மக்கள் மழலையர் பள்ளிகளைத் தொடங்கி நடத்துவதற்கு, தாட்கோ மூலமாக நிதியுதவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறப்பு நிதியுதவியின் வழிகாட்டுதலின்படி மழலையர் பள்ளிகள் துவக்கி நடத்த தாட்கோமூலம் நிதியுதவி செய்ய வழிவகை இல்லை.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய கல்வி கற்றோர் விகிதம், 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 73.45 விழுக்காடு. இதிலே தாழ்த்தப்பட்ட பழங்குடியினருடைய கல்வியறிவு விகிதம் 63 விழுக்காடுதான் இருக்கிறது. அதிலும் குறிப்பாக, அந்தச் சமூகத்தைச் சார்ந்த பெண்களை எடுத்துக்கொண்டால் பொதுவான கல்வியறிவு விகிதத்திற்கும், அதற்கும் 20 விழுக்காடு வேறுபாடு இருக்கிறது. இந்தக் குறைகளைப் போக்க வேண்டும் என்பதற்காக சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழே, ஒடுக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த குழந்தைகளுக்கு, குறிப்பாக Pre–School, அதாவது, பள்ளிகளிலே சேர்வதற்கு முன்னாலே மழலையர் பள்ளியிலே படிக்கின்ற நிலையிலே இருக்கின்ற குழந்தைகளுக்குச் சிறப்புக் கவனம் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கென்று திட்டங்களை வகுக்க வேண்டும் என்று வழிகாட்டுதல் தரப்பட்டு, கடந்த 2003 ஆம் ஆண்டிலே 5,000 நர்சரி பள்ளிகள் அப்போது அங்கன்வாடிகளாக இருந்தவை, நர்சரி பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இப்பொழுது தமிழ்நாட்டிலே சுமார் 31,000 மழலையர் பள்ளிகள் இருக்கின்றன. அதிலே 70 இலட்சம் குழந்தைகள் படிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படி இருக்கின்ற நிலையிலே இந்த ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள், சரியான கல்வி வசதி இல்லாமல் சிரமப்படுகின்ற இந்த நேரத்திலே, தாட்கோமூலமாகக் கொடுக்கப்படுகின்ற கடன்

வசதிகளிலே, இப்படிப்பட்ட பள்ளிகளைத் துவக்கி நடத்துவதற்கு, கடன் வசதி தந்தால் இந்தக் கல்வியிலே இருக்கின்ற ஏற்றத் தாழ்வை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

திரு. து. ரவிக்குமார்: குறைப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே, இதை அரசு பரிசீலித்து, இனியாவது இதற்காக நிதி உதவி செய்யுமா என்று உங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்குத் துவக்கப் பள்ளி 759–ம், பழங்குடி மாணவர்களுக்குத் துவக்கப் பள்ளி 200–ம், ஆக மொத்தம் 959 பள்ளிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. தாட்கோமூலமாக மழலையர் பள்ளிகள் நடத்துவதற்கு வாய்ப்புகள் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 39, திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

39—

குளிர்ப்பதனக் கூடம்

***1441—திருமதி ராணி வெங்கடேசன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரிய தாழையில் மீன்கள் பதப்படுத்தும் குளிர்ப்பதனக்கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது பெரிய தாழையில் மீன்கள் பதப்படுத்தும் குளிப்பதனக்கூடம் அமைப்பது குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீனவ நண்பர்களுக்காக அனேக நலத் திட்டங்களைச் செய்து இருக்கிறார்கள். மீனவர்களுக்காக ஒரு நல வாரியத் திட்டமே அமைத்து இருக்கிறார்கள். இதற்காக பெரிய தாழை மீனவ மக்களின் சார்பாகவும், என்னுடைய